<u>சுருக்கம்</u>

சமூக நலம்–ஊனமுற்றோர் நலம்–ஊனமுற்ற நபர்களுக்கு இலவச உதவி உபகரணங்கள் வழங்குதல்–மடக்குக்குச்சி மற்றும் கறுப்புக் கண்ணாடி வழங்கக்கோரி காத்திருக்கும் அனைத்து பார்வையற்ற நபர்களுக்கும் 4000 எண்ணிக்கைகள் மடக்குக் குச்சிகள் மற்றும் கறுப்புக் கண்ணாடிகள் 2007–08–ஆம் ஆண்டிற்கு வாங்கி வழங்குதல்–ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத்திட்டத் (சந4) துறை

அரசு ஆணை (நிலை) எண்.126 நாள் : 20.7.2007

படிக்க :

ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரின் கடித எண்.3330/இவாததி.1/07, நாள் 19.4.2007.

<u>ஆணை</u>

ஊனமுற்ற நபர்களுக்கு இலவச உதவி உபகரணங்கள் வழங்க ஆண்டுதோறும் ரூ.75/– இலட்சங்கள் பகுதி–II திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இத்தொகையில் அனைத்து உதவி உபகரணங்களும் வாங்கப்பட்டு ஊனமுற்ற நபர்களுக்கு இலவசமாக வழங்கப்பட வேண்டியுள்ளதால், மடக்குக் குச்சிகள் மற்றும் கறுப்புக் கண்ணாடிகள் குறைந்த எண்ணிக்கைகளே வாங்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்படுவதால், காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே செல்லும் நிலை ஏற்படுகின்றது என்றும், எனவே, நிதிநிலை அறிக்கை 2007–2008–ல் உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் உதவி பெறாமல் மீதமுள்ள அனைத்து பார்வையற்றோருக்கும் மடக்குக் குச்சிகள் மற்றும் கறுப்புக் கண்ணாடிகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளபடி மீதமுள்ள அனைத்து பார்வையற்றோருக்கும், மடக்குக் குச்சி மற்றும் கறுப்புக் கண்ணாடி ஜோடி ஒன்றின் விலை ரூ.180/– வீதம் 4000 எண்ணிக்கைகள் திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி மூலம் வாங்கி வழங்க ரூ.7,20,000/– (ரூபாய் ஏழு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யுமாறு அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

2. ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமாக பரிசீலித்த பின்னர், இலவச உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் உதவி பெறாமல் மீதமுள்ள அனைத்து பார்வையற்றோருக்கும் மடக்குக்குச்சிகள் மற்றும் கறுப்புக் கண்ணாடிகள் வாங்கி இலவசமாக வழங்க ரூ.7,20,000/– (ரூபாய் ஏழு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) தொடரா செலவினமாக நிதி ஒப்பளிப்பு செய்து இச்செலவினத்தை மேற்கொள்ள ஊனமுற்றோருக்கான மாநில ஆணையருக்கு அரசு அனுமதியளித்து ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படும்.

2235–சமூகப் பாதுகாப்பும் நலனும்–02–சமூக நலன்–101–உடலூனமுற்றோர் நலன்–II-மாநிலத் திட்டம்–JH-உடல் ஊனமுற்றோருக்கான மறுவாழ்வுத் திட்டம்–19–இயந்திரமும் சாதனமும்–01–வாங்குதல். (கு.தொ.கு.எண்.2235–02–101–JH-1914)

4. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் 2007–08–ஆம் ஆண்டிற்கான திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீட்டில் சேர்த்துக்கொள்ளப்படும். ஒதுக்கீடு செய்வதினை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள ஊனமுற்றோருக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளித்து அரசு ஆணை வெளியிடுகின்றது. 2007–08–ம் ஆண்டிற்கான திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீட்டிற்கு செயற்குறிப்பு அனுப்பும்போது இச்செலவினத்தையும் சேர்த்து அனுப்புமாறு ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்.

5. இவ்வாணை நிதித்துறையின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது. நிதித்துறை அ.சா.எண்.291/JS(BK)/SW/07-1, Dated 18.07.2007. கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.507.

/ஆளுநரின் ஆணைப்படி/

நா.ச.பழனியப்பன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர்,
சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட மறுவாழ்வு அலுவலர்கள்
(ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர், சென்னை–6 (மூலமாக)
மாநிலக் கணக்காயர், சென்னை–9/18/35 மற்றும் 18/35 (பெயரில்)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–5/9/35.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
அமைச்சர் (சமூக நலம்) அவர்களின் முதுநிலை உதவியாளர், சென்னை–9.
நிதி (சமூக நலம்)/(வ.செ.தி.II) துறை.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.